(ஒன்பதாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

**இல. 101.]**

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

### 2021 ஒக்டோபர் 21, வியாழக்கிழமை, மு.ப. 10.00 மணிக்கு

---

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1.

76/2020

கௌரவ ஹேஷா விதானகே,— நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள இரத்தினபுரி மாவட்டத்தில் அமைந்துள்ள தனியார் நிறுவனங்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) மேற்படி நிறுவனங்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி நிதியத்தில் அங்கத்துவம் பெற்றுள்ள இரத்தினபுரி மாவட்டத்தைச் சேர்ந்த ஊழியர்களின் எண்ணிக்கை, ஒவ்வொரு பிரதேச செயலக பிரிவுக்கமைய வெவ்வேறாக எத்தனையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தில் பதிவு செய்துகொள்வதற்காக கொண்டிருக்க வேண்டிய குறைந்தபட்ச தகைமைகள் யாவை என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2.

227/2020

கௌரவ மொஹமட் முஸம்மில்,— பெருந்தோட்ட அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரையிலான ஒவ்வொரு வருடத்திலும் —

(i) இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட சோளத்தின் அளவு யாதென்பதையும்;

(ii) அதற்காக செலவிடப்பட்ட பணத்தொகை எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி சோளம் எந்தெந்த நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டன என்பதையும்;

(iv) மேற்படி சோளம் இறக்குமதி செய்த கம்பெனிகள் யாவையென்பதையும்;

தனித்தனியாக அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மேற்படி காலப்பகுதியில் இலங்கைக்கு சோளத்தினை இறக்குமதி செய்வதற்காகச் செலவாகிய மொத்தத் தொகை எவ்வளவென்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3.

347/2020

கௌரவ எஸ்.எம். மரிக்கார்,— காணி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) திம்பிரிகஸ்யாய பிரதேச செயலகப் பிரிவிலுள்ள காணி உறுதியற்ற வீடுகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) அக்காணிகளுக்குரிய உறுதிகளை வழங்குவதற்கான வேலைத்திட்டமொன்று உள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், அவ்வேலைத்திட்டம் எவ்வாறு நடைமுறைப்படுத்தப்படும் என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4.

356/2020

கௌரவ புத்திக பத்திறண,— சுற்றாடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) மாத்தறை நில்வளா கங்கையில் கழிவுகள் அகற்றப்படுவதன் காரணமாக இந்த கங்கை மாசடைந்துள்ளது என்பதையும்;

(ii) மாத்தறை மாவட்டத்திலுள்ள மக்களின் சுகாதார நிலைக்கு இது பாதகமான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது என்பதையும்;

(iii) நீரின் தரத்தை பாதுகாத்துக்கொள்வதற்கு நில்வளா கங்கையின் இருமருங்கும் ஒதுக்கிடமாக பிரகடனப்படுத்தப்பட வேண்டும் என்பதையும்;

அவர் ஏற்றுக் கொள்வாரா?

(ஆ) (i) நில்வளா கங்கையின் இருமருங்கிலும் 33 அடிகளிலான ஒதுக்கிடமொன்றைத் தாபிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமாவென்பதையும்;

(ii) ஆமெனில், அத்திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) 2016 ஆம் ஆண்டில் நில்வளா கங்கையில் கழிவுகளை கொட்டியதன் காரணமாக ஆட்கள் கைது செய்யப்பட்டுள்ளார்களா என்பதையும்;

(ii) ஆமெனில், அத்தகைய ஆட்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

5.

493/2020

கௌரவ சமிந்த விஜேசிறி,— நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பண்டாரவளை தேர்தல் தொகுதியில் மத்திய அரசாங்கம், மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி அதிகார சபைகளுக்குச் சொந்தமாகவிருக்கும் வீதிகளின் நீளம் கிலோ மீற்றர்களில் தனித் தனியாக எவ்வளவு என்பதையும்;

(ii) அத்தகைய வீதிகளில், இன்றளவில் சேதமடைந்துள்ள வீதிகளின் நீளம் மேற்படி ஒவ்வொரு நிறுவனத்திற்கமைய தனித் தனியாக யாது என்பதையும்;

(iii) பண்டாரவளை தேர்தல் தொகுதிக்குச் சொந்தமான சகல வீதிகளையும் துரிதமாக அபிவிருத்தி செய்ய அமைச்சினால் எடுக்கப்படும் நடவடிக்கை யாது என்பதையும்;

அவர் இச்சபையில் தெரிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

6.

620/2020

கௌரவ துஷார இந்துனில் அமரசேன,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) மருத்துவப் பட்டங்களை வழங்கும் சில சர்வதேச பல்கலைக்கழகங்களை கறுப்புப் பட்டியலில் சேர்ப்பதற்கு இலங்கை மருத்துவச் சபை தீர்மானித்துள்ளதா;

(ii) ஆமெனில், மேற்படி பல்கலைக்கழகங்களின் பெயர்கள் யாவை;

(iii) அவ்வாறான தீர்மானமொன்றை மேற்கொள்வதற்கு ஏதுவான காரணங்கள் யாவை;

என்பதை அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) 2010 ஆம் ஆண்டு தொடக்கம் மேற்குறிப்பிட்ட (அ) (ii) இல் குறிப்பிடப்பட்டுள்ள பல்கலைக்கழகங்களிலிருந்து பட்டம் பெற்ற இலங்கை மாணவர்களின் எண்ணிக்கை ஒவ்வொரு ஆண்டுக்கமைய வெவ்வேறாக எத்தனை;

(ii) மேற்படி பல்கலைக்கழகங்கள் தொடர்பாக அமைச்சு மேற்கொள்ளவுள்ள அடுத்தகட்ட நடவடிக்கைகள் யாவை;

என்பதையும் அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

7.

754/ 2020

கௌரவ சாணக்கியன் ராஜபுத்திரன் இராசமாணிக்கம்,— சுற்றுலாத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) மட்டக்களப்பு மாவட்டத்தில் சுற்றுலாக் கைத்தொழிலை மேம்படுத்துவதற்காக தயார் செய்யப்பட்டுள்ள திட்டங்கள் யாவை என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

8.

822/2020

கௌரவ சாந்த பண்டார,— காணி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) குருநாகல் மாவட்டத்தில் வசிக்கும் பெரும் எண்ணிக்கையிலானவர்களின் காணிகளுக்கு உறுதிகள் இல்லை என்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(ii) மேற்படி காணிகளுக்கு உறுதிகளைப் பெற்றுக்கொடுப்பதற்கு வேலைத்திட்டமொன்று தயார் செய்யப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) பொல்பித்திகம பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட இறுதெனியாய கிராம மக்கள் இதுவரை சுமார் 50 வருடங்கள் அங்கு வசித்து வருகின்றனர் என்பதையும்;

(ii) அவர்களின் காணிகளுக்கு இதுவரை உறுதிகள் வழங்கப்படவில்லை என்பதையும்;

அவர் அறிவாரா?

(இ) இறுதெனியாய கிராம மக்களின் காணிகளுக்கு உறுதிகள் வழங்கப்படுகின்ற திகதி யாதென்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

9.

1203/2020

கௌரவ கே.பீ.எஸ். குமாரசிறி,— நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) அநுராதபுரம் மாவட்டத்தில் —

(i) பாரிய நீர்ப்பாசனத் திட்டங்களின் கீழ் 14 குளங்கள் காணப்படுவதோடு அவற்றுக்கான பயிர்நிலப் பரப்பு 126,242 ஏக்கர்கள் என்பதையும்;

(ii) நடுத்தர நீர்ப்பாசனத் திட்டங்களின் கீழ் 83 குளங்கள் காணப்படுவதோடு அவற்றுக்கான பயிர்நிலப் பரப்பு 29,775 ஏக்கர்கள் என்பதையும்;

(iii) மாகாண நீர்ப்பாசனத் திட்டங்களின் கீழ் 3,019 குளங்கள் காணப்படுவதோடு அவற்றுக்கான பயிர்நிலப் பரப்பு 106,185 ஏக்கர்கள் என்பதையும்;

(iv) மேற்படி பெரும்பாலான குளங்களில் தற்போது வண்டல் மண் படிந்துள்ளதுடன் செல்வீனியா மற்றும் ஆகாயத்தாமரை போன்ற பல்வகை நீர்த் தாவரங்கள் வளர்ந்து குளங்கள் நிரம்பியிருப்பதால் அவற்றின் நீர்க்கொள்ளளவு குறைவடைந்துள்ளதென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்குறிப்பிட்ட குளங்களை புனரமைப்பதற்காக இன்றளவில் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(ii) செல்வீனியா மற்றும் ஆகாயத்தாமரை போன்றவற்றைப் பயன்படுத்தி சேதனப் பசளை உற்பத்தி செய்வது தொடர்பாக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

10.

1283/2020

கௌரவ வருண லியனகே,— பிரதம அமைச்சர் மற்றும் பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் திட்டச் செயற்படுத்துகை அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2016 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரை இனங்காணப்பட்டுள்ள, இரத்தினபுரி மாவட்டத்தில் அமைந்துள்ள உயர் அபாய நேர்வுமிக்க வீடுகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) அவ்வீடுகளில் வசிக்கும், மீள் குடியேற்ற நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் அனுகூலங்கள் உரித்தான குடும்பங்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மீள் குடியேற்ற நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் மேற்குறிப்பிட்ட உயர் அபாய நேர்வுமிக்க வீடுகளில் வசிக்கும் குடும்பங்களுக்கு அனுகூலங்களை வழங்குவதில் தாமதம் நிலவுவதனை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) இன்றேல், ஏன்?

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## சட்டமூல சமர்ப்பண முன்னறிவித்தல்

1.

நிதி அமைச்சர்,— ஒதுக்கீடு (திருத்தம்),— 2020 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

## பிரேரணை முன்னறிவித்தல்கள்

2.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அமர்வுகள் (இல. 1),— பாராளுமன்ற நிலையியற் கட்டளை 8 இன் ஏற்பாடுகளினாலும், 2020 ஒக்டோபர் 06 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரேரணையினாலும் தடைபெறாமல், 2021 ஒக்டோபர் 22 ஆம் திகதி வெள்ளிக்கிழமை, சபை அமர்வு நேரம் மு.ப. 10.00 மணி முதல் பி.ப. 5.30 வரை இருக்குமாக. நண்பகல் 12.00 மணிக்கு பாராளுமன்ற நிலையியற் கட்டளை 8(5) தொழிற்படுமாக. பி.ப. 5.30 மணிக்கு சபாநாயகர் பாராளுமன்றத்தை வினாவின்றி ஒத்திவைப்பாராக.

3.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அலுவல்கள் (இல. 1),— “ஒதுக்கீட்டுச்” சட்டமூலம் (2022) இன் பரிசீலனைக்காக பாராளுமன்ற நிலையியற் கட்டளை 75(1) இல் குறிப்பிடப்பட்டுள்ள "இருபத்தி ஆறு" எனும் சொற்களுக்குப் பதிலாக "இருபத்தி மூன்று" எனும் சொற்களை இடுவதன் மூலம் இக்கட்டளை தொழிற்படுமாக.

4.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அலுவல்கள் (இல. 2),— 2021 நவம்பர் 13 ஆம் திகதி சனிக்கிழமை, 15 ஆம் திகதி திங்கட்கிழமை, 16 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை, 17 ஆம் திகதி புதன்கிழமை, 19 ஆம் திகதி வெள்ளிக்கிழமை, 20 ஆம் திகதி சனிக்கிழமை மற்றும் 22 ஆம் திகதி திங்கட்கிழமை ஆகிய நாட்கள் “ஒதுக்கீட்டுச்” சட்டமூலம் (2022) இன் பரிசீலனைக்கென ஒதுக்கப்பட்ட நாட்களாகுமாக.

5.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அமர்வுகள் (இல. 2),— பாராளுமன்ற நிலையியற் கட்டளை 75(2) இன் ஏற்பாடுகளினால் தடைபெறாமல், “ஒதுக்கீட்டுச்” சட்டமூலம் (2022) இன் பரிசீலனைக்கென ஒதுக்கப்பட்ட நாட்களான 2021 நவம்பர் 13 ஆம் திகதி சனிக்கிழமை முதல் 2021 நவம்பர் 20 ஆம் திகதி சனிக்கிழமை வரையிலான நாட்களில் சபை அமர்வு நேரங்கள் மு.ப. 9.30 மணி முதல் பி.ப. 12.30 மணி வரையும், பி.ப. 1.00 மணி முதல் பி.ப. 5.30 மணி வரையும் இருக்குமாக. பி.ப. 5.00 மணிக்கு பாராளுமன்ற நிலையியற் கட்டளையின் 8(5) ஆம் மற்றும் (6) ஆம் பந்திகள் தொழிற்படுமாக. பி.ப. 5.30 மணிக்கு சபாநாயகர் பாராளுமன்றத்தை வினாவின்றி ஒத்திவைப்பாராக.

6.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அமர்வுகள் (இல. 3),— பாராளுமன்ற நிலையியற் கட்டளை 75(2) இன் ஏற்பாடுகளினால் தடைபெறாமல், “ஒதுக்கீட்டுச்” சட்டமூலம் (2022) இன் பரிசீலனைக்கென ஒதுக்கப்பட்ட தினமாகிய 2021 நவம்பர் 22 ஆம் திகதி திங்கட்கிழமை சபை அமர்வு நேரம் மு.ப. 9.30 மணி முதல் பி.ப.12.30 மணி வரையும் பி.ப. 1.00 மணி முதல் பி.ப. 5.00 மணி வரையும் இருக்குமாக. பி.ப. 5.00 மணிக்கு சபாநாயகர் பாராளுமன்றத்தை வினாவின்றி ஒத்திவைப்பாராக.

7.

கௌரவ சந்திம வீரக்கொடி,— சட்டமூலம் கொண்டுவர அனுமதி,— பின்வரும் சட்டமூலம் கொண்டுவர அனுமதி வழங்கப்படுமாக :-

“தஸ்ஸனா பௌத்த சன்விதானயவைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்”

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

* 1.

குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 2.

இளந்தவறாளர்கள் (பயிற்சிப் பாடசாலைகள்) (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 3.

தண்டனைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 4.

நீதி அமைச்சர்,— குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவையின் கீழ் ஒழுங்குவிதிகள்,— (101 ஆம் அத்தியாயமான) குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவையின் 214 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 840 ஆம் பிரிவின் கீழ் நீதி அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2021 யூலை 02 ஆம் திகதிய, 2234/67 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2021.09.21 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 5.

பிரதம அமைச்சர் மற்றும் பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் திட்டச் செயற்படுத்துகை அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர்,— செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் கட்டளை (இல. 1),— 2008 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் 3(4) ஆம் பிரிவின் கீழ் பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் திட்டச் செயற்படுத்துகை அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2021 யூலை 30 ஆம் திகதிய 2238/40 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2021.10.05 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 6.

பிரதம அமைச்சர் மற்றும் பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் திட்டச் செயற்படுத்துகை அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர்,— செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் கட்டளை (இல. 2),— 2008 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் 3(4) ஆம் பிரிவின் கீழ் பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் திட்டச் செயற்படுத்துகை அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2021 செப்தெம்பர் 06 ஆம் திகதிய 2244/3 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2021.10.05 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 7.

கைத்தொழில் அமைச்சர்,— தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 1993 ஆம் ஆண்டின் 50 ஆம் இலக்க தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபைச் சட்டத்தின் பிரிவு 14(1)(ஊ) மற்றும் 15 ஆம் பிரிவுடன் உடன் வாசிக்க வேண்டிய, 53 ஆம் பிரிவின் கீழ் இரத்தினக்கல் மற்றும் ஆபரண உரிமக் கட்டணம் தொடர்பில் கைத்தொழில் மற்றும் வழங்கல் முகாமைத்துவ அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2020 மார்ச் 02 ஆம் திகதிய 2165/1 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையின் அச்சுப் பிழைகள் திருத்தப்பட்டு, 1993 ஆம் ஆண்டின் 50 ஆம் இலக்க தேசிய இரத்தினக்கற்கள் மற்றும் ஆபரணங்கள் அதிகார சபைச் சட்டத்தின் பிரிவு 53 இன் கீழ் கைத்தொழில் அமைச்சரால் ஆக்கப்பட்டு 2021 ஏப்ரல் 01 ஆம் திகதிய 2221/49 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2021.06.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 8.

தொழில் அமைச்சர்,— பெண்களையும் இளம் ஆட்களையும் மற்றும் பிள்ளைகளையும் தொழிலுக்கமர்த்துதல் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதி,— 1956 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, பெண்களையும் இளம் ஆட்களையும் மற்றும் பிள்ளைகளையும் தொழிலுக்கமர்த்துதல் சட்டத்தின் 20அ என்னும் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 31 ஆம் பிரிவின் கீழ் தொழில் அமைச்சரினால் ஆக்கப்பட்டதும் 2021.10.04 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதி அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 9.

வனசீவராசிகள் மற்றும் வனப்பாதுகாப்பு அமைச்சர்,— தாவர, விலங்கினப் பாதுகாப்புச் கட்டளைச் சட்டத்தின் கீழ் கட்டளை,— (469 ஆம் அத்தியாயமான) தாவர, விலங்கினப் பாதுகாப்புச் கட்டளைச் சட்டத்தின் 2(2) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் கீழ் வனசீவராசிகள் பாதுகாப்பு, மின்சாரவேலி மற்றும் அகழிகளை நிர்மாணித்தல் மற்றும் காடு மீள்வளர்ப்பு அத்துடன் காட்டு வள அபிவிருத்தி உள்ளிட்ட பாதுகாப்பு நடவடிக்கைகளைக் கடைப்பிடித்தல் இராஜாங்க அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2021 ஏப்ரல் 09 ஆம் திகதிய 2222/62 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2021.10.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 10.

காணி அமைச்சர்,— காணி எடுத்தற் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— (460 ஆம் அத்தியாயமான) காணி எடுத்தற் சட்டத்தின் 63(2)(ஊ) ஆம் பிரிவின் கீழ் காணி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2021 செப்தெம்பர் 08 ஆம் திகதிய 2244/13 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2021.10.08 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 11.

சுற்றுலாத்துறை அமைச்சர்,— குடியியல் வான்செலவுச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 2010 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, குடியியல் வான்செலவுச் சட்டத்தின் 117(2)(ட) ஆம் பிரிவின் கீழ் சுற்றுலாத்துறை அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2020 செப்தெம்பர் 08 ஆம் திகதிய 2192/21 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2021.10.08 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 12.

குடிவருவோர், குடியகல்வோர் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 13.

ஒதுக்கீடு சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 14.

ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவலை தேசிய பாதுகாப்புப் பல்கலைக்கழகச் சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (2021 யூலை 08) [1].

* 15.

நிதி அமைச்சர்,— இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் திருத்தப்பட்டவாறான, 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் 4(1) மற்றும் 14 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அச்சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ், நிதி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2021 மே 06 ஆம் திகதிய 2226/48 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2021.06.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 16.

பிரதம அமைச்சர் மற்றும் பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் திட்டச் செயற்படுத்துகை அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர்,— 2015 சனவரி மாதம் 08 ஆம் திகதியிலிருந்து 2019 நவம்பர் மாதம் 16 ஆம் திகதி வரையிலான காலப்பகுதிக்குள் பதவி வகித்த அரசாங்க உத்தியோகத்தர்கள், அரசாங்க கூட்டுத்தாபனங்களின் ஊழியர்கள், முப்படையினர் மற்றும் பொலிஸ் சேவை உறுப்பினர்கள் ஆகியோர்களுக்கு இடம்பெற்றுள்ளதாக கூறப்படும் அரசியல் ரீதியிலான பழிவாங்கல்கள் தொடர்பில் ஆராய்ந்து தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கான சனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் தீர்மானங்களையும் சிபாரிசுகளையும் செயற்படுத்துதல்,—

மேற்குறித்த விடயம் சம்பந்தமாக அதிமேதகு சனாதிபதி அவர்களினால் அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்ட 2021.01.15 ஆம் திகதிய அமைச்சரவை விஞ்ஞாபனத்திற்கு ஏற்புடைய அமைப/21/0105/301/003 ஆம் இலக்க, 2021.02.15 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்திற்கு ஏற்ப பின்வரும் விடயங்கள் சம்பந்தமாக அமைச்சரவையின் அனுமதி வழங்கப்பட்டுள்ளது:—

(அ) சனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் இறுதி அறிக்கையை (அதன் முதலாம், இரண்டாம் மற்றும் மூன்றாம் தொகுதிகளையும், எழுத்துப் பிழைகள் மற்றும் அச்சுப் பிழைகள் என்பவற்றைத் திருத்தும் பின் இணைப்பையும் உள்ளடக்கிய) பிரேரணை அங்கீகாரமொன்றினூடாக பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பித்தல்;

(ஆ) அந்த இறுதி அறிக்கையின் முதலாம் தொகுதியின் 08 ஆம் இலக்க விடயத்தின் கீழ் சுட்டிக்காட்டப்பட்டுள்ள ஊழல் எதிர்ப்புக் குழு சம்பந்தமாக அந்த ஆணைக்குழுவினால் செய்யப்பட்டுள்ள தீர்மானங்களையும், சிபாரிசுகளையும் நடைமுறைப்படுத்தல்;

(இ) குறித்த 08 ஆம் இலக்க விடயத்தில் குறிப்பிடப்பட்டுள்ள 1 ஆம் இலக்கத் தீர்மானம் மற்றும் 1 ஆம் இலக்க சிபாரிசு என்பவற்றை நடைமுறைப்படுத்துவதற்கு விசேட சனாதிபதி விசாரணை ஆணைக்குழுவொன்றினை நியமித்தல் அல்லது பாராளுமன்றத்தினால் அதற்காக விதித்துரைக்கப்படும் பிற பொருத்தமான வழிமுறையொன்றினை மேற்கொள்ளுதல்;

(ஈ) மேற்குறித்த விசாரணை ஆணைக்குழுவின் இறுதி அறிக்கையின் முதலாம், இரண்டாம் மற்றும் மூன்றாம் தொகுதிகளில் மற்றும் அந்த இறுதி அறிக்கையின் எழுத்துப் பிழைகள் மற்றும் அச்சுப் பிழைகள் என்பவற்றைத் திருத்தும் பின் இணைப்பில் 08 ஆம் இலக்க விடயத்திலும் 09 ஆம் இலக்க விடயத்தில் I முதல் LXI வரையிலுமுள்ள முறைப்பாடுகளுக்கு உரியதாக அந்த ஆணைக்குழுவினால் எடுக்கப்பட்டுள்ள தீர்மானங்களையும் சிபாரிசுகளையும் நடைமுறைப்படுத்தும் பொருட்டு, இந்த தீர்மானங்கள் மற்றும் சிபாரிசுகளை இலஞ்ச அல்லது ஊழல் முறைப்பாடுகள் பற்றி புலனாய்வு செய்யும் ஆணைக்குழுவுக்கும் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவுக்கும் பொலிஸ்மா அதிபருக்கும் உரிய அமைச்சுக்களுக்குப் பொறுப்பான அமைச்சர்களுக்கும் அமைச்சுக்களின் செயலாளர்களுக்கும் உரிய அதிகாரிகளுக்கும் அனுப்புதல்; மற்றும்

(உ) குறித்த இறுதி அறிக்கையின் மூன்றாம் தொகுதியில் 10 ஆம் இலக்க விடயத்தின் கீழ் குறிப்பிடப்படும் முறைப்பாடுகளுக்கு உரியதாக குறித்த சனாதிபதி விசாரணை ஆணைக்குழுவினால் எடுக்கப்பட்டுள்ள தீர்மானங்களையும் சிபாரிசுகளையும் நடைமுறைப்படுத்தல்

அதற்கேற்ப, மேலே (இ) இல் குறிப்பிடப்பட்டவாறு 2221/54 ஆம் இலக்க, 2021.04.01 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானி ஊடாக அதிமேதகு சனாதிபதி அவர்களினால் விசேட சனாதிபதி விசாரணை ஆணைக்குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளமையினால், மேற்குறித்த அமைச்சரவைத் தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் இறுதி அறிக்கையில் உள்ளடங்கியுள்ள 08 ஆம் இலக்க விடயத்தின் தீர்மானங்கள் மற்றும் சிபாரிசுகளை நடைமுறைப்படுத்துவது சம்பந்தமாக விசேட சனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கை கிடைத்த பின்பு கருத்திற்கொள்வதற்கு உட்பட்ட வகையில் குறித்த அமைச்சரவைத் தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அரசியல் பழிவாங்கல்கள் தொடர்பில் ஆராய்ந்து தகவல்கள் பெற்றுக்கொள்ளப்பட்ட ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் இறுதி அறிக்கையின் (அதன் முதலாம், இரண்டாம், மூன்றாம் தொகுதிகளையும் எழுத்துப் பிழைகள் மற்றும் அச்சுப் பிழைகள் என்பவற்றைத் திருத்தும் பின் இணைப்பினையும் உள்ளடக்கிய) 08 ஆம் இலக்க விடயத்தைத் தவிர்த்து 09 மற்றும் 10 ஆம் இலக்க விடயங்களில் உள்ளடங்கியுள்ள தீர்மானங்களையும் சிபாரிசுகளையும் மேலே (ஈ) மற்றும் (உ) இல் குறிப்பிடப்பட்டவாறு நடைமுறைப்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்ற பிரேரணை நிறைவேற்றுமாக.

17.

சொத்துக்களையும் பொறுப்புக்களையும் வெளிப்படுத்தல் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

18.

புகையிலை வரி (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

19.

வைட் றோஸ் மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.

---

[1] "சட்டமூலம் இப்பொழுது இரண்டாம் முறையாக மதிப்பிடப்பெறுமாக" எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

---